# வேண்டுதல் யாவையும் கேட்டருள்வாய்

வேண்டுதல் யாவையும் கேட்டருள்வாய்-தரும்
வேள்வியை மனமுவந்தேற்றிடுவாய்  -  இறைவா

**1**
அருள்நிறை உள்ளமும்
பொருள் நிறை வாழ்வும்
அமைந்திட வேண்டும் - நீ
அருள்தர வேண்டும்    - ( 2 )
அனைத்திலும் மேலாய்
ஆண்டவன் உனை நான்   - ( 2 )
ஆயுள் உள்ளவரை பாடும் வரம் வேண்டும்
பாடிபபாடியே போற்றும் வரம்  வேண்டும்

**2**
மணமமிகு மலரும் மனம்நிறை அன்பும்
மகிழ்ந்துனைப் புகழ்ந்து - நின்
மலரடி படைத்தோம்     - ( 2 )
மாதவனே இந்த மானிடர் செய்த  -( 2 )
பாவம் யாவையும் பொறுத்தருள் செய்வாய்
தூய வாழ்வுதனை நல்கி அருள்தருவாய்